DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.59/2023**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ஜானகி | கிராமம் : | |
| கணவர் பெயர் : | வைத்தீஸ்வரன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.12.2024.
1 முதல் 3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் தாலுகா, நத்தமேட்டில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது கணவர் வைத்தீஸ்வரன் தான் குடும்பத்தின் மூத்தவர். அவர் இறந்துவிட்டார். நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளோம். 1ம் எதிரி நீலமேகம் எனது கணவரின் தம்பி. 2ம் எதிரி வளர்மதி எனது கணவரின் தம்பி மனைவி. 3ம் எதிரி மல்லிகா எனது கணவரின் இன்னொரு தம்பி மனைவி. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 12ம் தேதி இரவு 10.30 மணிக்கு மேல் நானும், என் தங்கை இந்திராணி, மருமகள் மேனகா ஆகியோர் தோட்டத்து வீட்டில் இருந்தோம். நீலமேகம், வளர்மதி மோட்டார் ரூம் பூட்டை உடைத்து தண்ணீரை எடுத்துவிட்டார்கள். கேஸ் நிலுவை உள்ள நிலையில் எதற்காக தண்ணீர் எடுத்துவிடுகிறீர்கள் என கேட்டோம்.

2. பேசிக்கொண்டிருக்கும்போது நீலமேகம் அரிவாளால் என் தங்கையின் வலது கைமுட்டியில் வெட்டிவிட்டார். என் தங்கை கத்தியதால் நானும், என் மருமகளும் என் தங்கையை அழைத்து கொண்டு ரோட்டுக்கு வந்துவிட்டோம். என் மகன் ஜெகதீஸனுக்கு போன் செய்து, வரவழைத்து என் தங்கையை கரூரில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை ஏதும் இல்லை என கூறினார்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/– M.Santhosham,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.